*2019 ஜூலை 20] [திரு. செ. ராஜேஷ் குமார்]*

*சென்றார்கள். ஆனால், சூறைக் காற்று வீசியதால், நேற்றைய தினம் திரும்பி வரும்போது இரண்டு பேர் மட்டுமே அதிலிருந்து தப்பி, திரும்ப வந்திருக்கின்றார்கள். மீதமுள்ள மூன்று பேர் மாயமாகியுள்ளனர். அவர்களை மீட்க வேண்டுமென்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதேபோல். . .*

## (அஅ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், மாற்றுத் திறனாளிகளுக்கான காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு பிரத்யேக தேர்வு நடத்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அதெல்லாம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ் அவர்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ் அவர்கள்.*

***திரு. ஆர். நடராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* **T.N.P.S.C.** *மூலமாக நிரப்பப்படும் அரசு காலிப் பணியிடங்களில், மாற்றுத் திறனாளிகளுக்கான பணியிடங்களில் கிட்டத்தட்ட 400-க்கும் மேற்பட்ட இடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. அவற்றை நிரப்புவதற்கு பிரத்யேகமான ஒரு தேர்வு நடத்த வேண்டும் என்பது பற்றி அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். நன்றி.*

## (ஔ) கிள்ளியூர் தொகுதி, நீரோடி கிராமம், காணாமல் போன மீனவர்களைக் கண்டுபிடித்தல்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 15 ஆம் தேதி. . . (குறுக்கீடு) திரு. ராஜேஷ் குமார், இங்கு கவனியுங்கள். கடந்த 17 ஆம் தேதியல்ல; கடந்த 15 ஆம் தேதியன்று மேற்குக் கடற்கரைப் பகுதியைச் சார்ந்த நீரோடி என்ற மீனவக் கிராமத்திலிருந்து கண்ணாடி இழை கட்டுமரத்தில் மீன் பிடிக்கச் சென்றவர்கள் கரை திரும்பியிருக்க வேண்டும். ஆனால், எதிர்பாராத விதமாக கடலில் ஏற்பட்ட சூறாவளிக் காற்றின் காரணமாக கண்ணாடி இழை கட்டுமரம் கவிழ்ந்து, இரண்டு மீனவர்கள் கரை திரும்பியுள்ளார்கள்.*